செய்தி வெளியீடு எண் : 89 நாள் : 10.01.2025

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி,

- **2025–26 ஆண்டிற்கான காப்புறுதி கட்டணத்தொகை ரூ.1262 கோடிக்கான காசோலை யுனைடெட் இந்தியா காப்பீடு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது**
- **பணியின்போது உயிரிழந்த 6 மருத்துவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.1 கோடி வழங்கப்பட்டது**

–மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் கலந்து கொண்டு விழா பேரூரையாற்றினார்கள்

******

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையில் இன்று (10.01.2025) சென்னை, தேனாம்பேட்டை, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை கூட்டரங்கில், 2025–26 ஆம் ஆண்டிற்கான காப்புறுதி கட்டணத் தொகை ரூ.1262.91 கோடிக்கான காசோலை யுனைடெட் இந்தியா காப்பீடு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. பின்னர் மருத்துவர்களின் விருப்ப பங்களிப்பு தொகுப்பு நிதியிலிருந்து பணியிலிருக்கும்போது உயிரிழந்த 6 மருத்துவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.1 கோடி வீதம் வழங்கினார்கள். இதன்பிறகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டத்தில் சிறப்பாக பணியாற்றிய மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநரக கட்டுப்பாட்டில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரிகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கு விருதுகள் வழங்கி சிறப்பித்து விழா பேரூரையாற்றினார்கள். அவர் ஆற்றிய உரை வருமாறு:–

***<u>பணியின் போது உயிரிழந்த ஆறு மருத்துவர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா ரூ.1 கோடி வீதம் ரூ.6 கோடி நிதி உதவி வழங்குதல்</u>***

தமிழ்நாடு அரசுப் பணியில் பணிபுரிந்து வரும் மருத்துவர்கள், எதிர்பாராத வகையில் உயிரிழக்க நேரிட்டால், அவர்களின் வாரிசுதாரர்களுக்கு உதவித்தொகை வழங்கிட மருத்துவர்களின் விருப்ப பங்களிப்பு தொகுப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு, கடந்த 2020-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு ரூ.50இலட்சம் வழங்கப்பட்டு வந்தது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பணியின்போது உயிரிழக்கும் அரசு மருத்துவர்களுக்கு மருத்துவர்களின் விருப்ப பங்களிப்பு தொகுப்பு நிதியிலிருந்து ரூ.1கோடி நிதி வழங்கிட 12.10.2021 அன்று அரசாணை வெளியிடப்பட்டு, ரூ.1கோடி நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஒவ்வொரு மருத்துவரும் விருப்பத்தின் அடிப்படையில் இந்த நிதியத்தில் சேர்ந்து பங்களிப்பாக 2020-21 ஆம் ஆண்டில் ரூ.6,000/- மொத்தமாக செலுத்தினர். அதன்படி, மார்ச் 2022 ஆம் ஆண்டு முதல் மாதந்தோறும் ரூ.500/- ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது வரை இந்த திட்டத்தில் சுமார் 10,900 மருத்துவர்கள் விருப்பம் தெரிவித்து அதன் அடிப்படையில் சந்தா செலுத்தி வருகின்றனர். அந்த வகையில் மருத்துவர்களின் விருப்ப பங்களிப்பு தொகுப்பு நிதியிலிருந்து முதற்கட்டமாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பணியின் போது உயிரிழந்த 13

மருத்துவர்களின் வாரிசுதாரர்களுக்கு மொத்தமாக ரூ8.50 கோடி நிதிக்கான காசோலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 13.04.2023 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பணியின் போது உயிரிழந்த 7 மருத்துவர்களின் வாரிசுதாரர்களுக்கு மொத்தமாக ரூ.7 கோடி நிதிக்கான காசோலைகள் 27.02.2024 அன்று வழங்கப்பட்டது. இந்த திட்டத்தில் இதுவரை பணியில் இருக்கும்போது தன் இன்னுயிர் இழந்த 20 மருத்துவர்களின் வாரிசுதாரர்களுக்கு மொத்தம் ரூ.15.50 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மூன்றாம் கட்டமாக 2022-23 ஆம் ஆண்டில் பணியின் போது உயிரிழந்த மரு.S.வினோத்குமார் அவர்களின் துணைவியார் திருமதி T.வினோதா, அவர்களுக்கும், மரு.முகமது கலீபா அவர்களின் துணைவியார் திருமதி. மிசிரியா கலீபா அவர்களுக்கும், மரு.K.S.T. சுரேஷ் அவர்களின் துணைவியார் திருமதி.T,காயத்ரி அவர்களுக்கும், மரு.P.வேல்முருகன் அவர்களின் துணைவியார் திருமதி.V.சங்கீதா அவர்களுக்கும், மரு.P.ஸ்வாமிநாதன் அவர்களின் தாயார் திருமதி.M.பழனியம்மாள் அவர்களுக்கும் மற்றும் மரு.A.மேகநாதன் அவர்களின் துணைவியார் திருமதி.வைஜயந்தி ஆகிய ஆறு மருத்துவர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா ரூ.1 கோடி வீதம் ரூ.6 கோடி இன்று (10.01.2025) வழங்கப்பட்டது.

***முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் ரூ.1,262.91 கோடிக்கான காசோலை யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்திற்கு வழங்குதல்***

ஏழை, எளிய மக்கள் அனைவரும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் எவ்வித கட்டணமுமின்றி பயன்பெற வேண்டுமென்ற உயரிய நோக்குத்துடன் மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 23.07.2009 அன்று உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான முதலமைச்சர் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்._மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 10.01.2022 மீண்டும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டம் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தில் இதுவரை 1.48 கோடி குடும்பங்கள் பயனாகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், இத்திட்டத்தில் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/–லிருந்து ரூ.1,20,000/-ஆக உயர்த்தப்பட்டு, குடும்பத்திற்கு ரூ.5 இலட்சம் வரை காப்பீட்டு தொகை மற்றும் அரசு பிரீமியம் தொகையாக ஒரு குடும்பத்திற்கு ரூ.849/- (கடந்த ஆட்சியில் ரூ.699/-) நிர்ணயிக்கப்பட்டு, 10.01.2022 முதல் 5 ஆண்டுகளுக்கு ரூ.7,730 கோடி என்கின்ற வகையில் – கடந்த 10.01.2022 அன்று ரூ.1,248.29 கோடிக்கான காசோலையை யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்திற்கு வழங்கினார்கள். இதன் தொடர்ச்சியாக 10.01.2023 அன்று ரூ.1,200/- கோடி பிரிமியம் தொகை வழங்கப்பட்டது. பின்னர் 10.01.2024 அன்று ரூ.1,228.27/- கோடி வழங்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் 11.01.2025 முதல் 10.01.2026 வரை ஆண்டிற்கான பிரீமியமாக ஒரு குடும்பத்திற்கு ரூ.849/- வீதம் 1,48,57,459 பயனாளி குடும்பங்களுக்கு 95% தொகை ரூ.1198.32 கோடி கடந்த ஆண்டின் மீதமுள்ள 5% பிரீமியம் தொகை ரூ.64.59 கோடி ஆக மொத்தம் ரூ.1,262.91 கோடிக்கான காசோலை யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் 23.07.2009 முதல் 08.01.2025 வரை ரூ.13,991/–கோடி செலவில்1,45,81,445 பேர் பயன்பெற்றுள்ளனர். இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 08.01.2025 வரை ரூ.5,310 கோடி செலவில் 76,94,307 பேர் பயன்பெற்றுள்ளனர். முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தில் 942 அரசு மருத்துவமனைகள், 1215 தனியார் மருத்துவமனைகள் என்று மொத்தம் 2157 மருத்துவமனைகள் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. கடந்த ஆட்சி காலத்தில் 970 மருத்துவமனைகள் மட்டுமே இந்த திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. 2053 மருத்துவம் மற்றும்

அறுவை சிகிச்சை முறைகள், 8 சிறப்பு உயர் சிகிச்சை முறைகள், 52 முழுமையான பரிசோதனை முறைகள், 11 தொடர் சிகிச்சை முறைகள் இந்த திட்டத்தின்கீழ் செய்யப்பட்டு வருகிறது.

மேலும், சிறப்பினமாக கோவிட் தொற்றினால் பெற்றோரை இழந்து ஆதரவின்றி தவிக்கும் 1320 குழந்தைகளுக்கு சிறப்பு அங்கீகார அட்டை வழங்கப்பட்டுள்ளது. வருமான உச்சவரம்பின்றி 1414 செய்தியாளர்கள் குடும்பங்களின் பயனாளிகள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். 4276 திருநங்கைகள், 3322 முதியோர் இல்லத்தில் வசிப்பவர்கள், அரசு மன நல காப்பகத்தில் சிகிச்சை பெறும் 520 பேர் இந்த திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், 17.06 இலட்சம் கட்டுமான தொழிலாளர்கள் உள்ளிட்ட அமைப்பு சாரா தொழிலாளர்கள், 29,787 தூய்மை பணியாளர்கள் நல வாரியத்தை சேர்ந்தவர்களும் இந்த திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடத்திய முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிறப்பு முகாம்கள் மூலம் தமிழ்நாடு முழுவதும் 99,935 புதிய பயனாளிகள் சேர்க்கப்பட்டுள்ளனர். சென்னையில் மட்டும் 9,796 புதிய பயனாளிகள் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆக இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 07.05.2021 முதல் 02.01.2025 வரை 17,79,666 புதிய பயனாளிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

***முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டத்தின் பயன்கள்***

இந்த திட்டத்தின் கீழ் செய்யப்படும் 8 உயர் சிகிச்சைகளான கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை, காதுவால் நரம்பு உள்வைப்பு அறுவை சிகிச்சை மற்றும் ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சை, நுரையீரல் மற்றும் இருதய மாற்று அறுவை சிகிச்சை, நுரையீரல் வால்வு மாற்று அறுவை சிகிச்சை, செவிப்புல மூளை தண்டு உள்வைப்பு அறுவை சிகிச்சையின் கீழ் இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 10.01.2025 வரை ரூ.596.34 கோடி செலவில் 6,272 பேர் பயனடைந்துள்ளனர்.

**அரசு மருத்துவக்கல்லூரிகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கு பாராட்டு பரிசு வழங்குதல்**

சென்னை, இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை, மதுரை, அரசு இராஜாஜி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை, கடலூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, ஈரோடு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, கோவில்பட்டி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனை, மதுரை, வேலம்மாள் மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், கோவை மெடிக்கல் சென்டர் மற்றும் ஆராய்ச்சி மையம், கோயம்புத்தூர், மெட்ராஸ் ENT ஆராய்ச்சி அறக்கட்டளை, சென்னை, ஸ்ரீராமச்சந்திரா மெடிக்கல் சென்டர், போரூர் ஆகிய 15 மருத்துவமனைகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்காக பாராட்டு சான்றிதழ் மற்றும் பரிசுகள் இன்று வழங்கப்பட்டது. மேலும், இந்த திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவதற்கு உறுதுணையாக இருந்த யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனம் Third Party Administrators (TPA) மற்றும் சிறப்பாக பணியாற்றிய மாவட்ட திட்ட அலுவலர்களுக்கு பாராட்டு பரிசு வழங்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் விழா பேரூரையாற்றினார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, இ.ஆ.ப., தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் மரு.அருண்தம்புராஜ்,இ.ஆ.ப, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர்

மரு.செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.ராஜமூர்த்தி, யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் காப்பீடு நிறுவனத் தலைவர் மற்றும் இயக்குநர் திரு.பூபேஷ் சுஷில் ராகுல் மற்றும் மருத்துவக்கல்லூரி முதல்வர்கள், மருத்துவப் பேராசிரியர்கள், உயரலுலவர்கள் கலந்து கொண்டனர்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu